# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study
in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தொல்லியல்

# *Country Lands and Places Found in Sambuvarayar Inscriptions*

*Dr. A. AMULRAJ,*

*Assistant Professor of Tamil*

*Vallal P.T.Lee Chengalvaraya Naicker Arts & Science College, Choolai, Chennai 112.*

## *Abstract*

*The ancient Tamils, who lived as the first material of land and diurnal periods named their places of residence according to the geography of the land. Mountain -based living lands are called 'Naadu (for Ex. Malai Nadu); forest -based mullah lands are called as, Kaanagam , 'Pattikkadu', 'Chembulam' (clay-based land); Agri-based living lands are called 'Puram', Uurr (which is why the people who lived there were called as Uran and Kizhavan); and the sea side living lands were called Pakkam and Pattinam . Similarly, the places where the troops stayed and fought were known as Paadivedu, Padaivedu and Paasarai. All these names help us to understand the geography and history of the people. Sambuvaraya s who have set up a Separate kingdoms in the Middle Ages of Tamil Nadu who have been the head of the Chola kingdom as the head of the land. The purpose of this article is to introduce information found in places such as the inscriptions found in them.*

## **சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**

**முனைவர்அ. அமுல்ராஜ்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

வள்ளல் பெ.தெ.லீ செங்கல்வராய நாயக்கர் கலை (ம) அறிவியல் கல்லூரி,

சென்னை *-112.*

### ஆய்வுச்சுருக்கம்

நிலத்தையும், பொழுதையும் முதற்பொருளாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழர்கள், அந்நிலங்களின் நிலவியல் தன்மைக்கேற்ப வாழும் இடங்களுக்கு பெயரிட்டு அழைத்தனர். மலைசார்ந்த குறிஞ்சி நில ஊர்களுக்கு நாடு என்றும், காடு சார்ந்த முல்லை நில ஊர்களுக்கு கானகம் , பட்டிக்காடு , செம்புலம் (செம்மண் சார்ந்த நிலப்பகுதி) என்றும், வயல் சார்ந்த மருதநில ஊர்களுக்கு புரம் , ஊர் (அதனாலேயே அங்கு வாழ்ந்த மக்களுக்கு ஊரன், கிழவன் என்ற பெயருண்டு) என்றும், கடல்சார்ந்த நெய்தல்நில ஊர்களுக்கு பாக்கம் , பட்டினம் என்றும் பெயரிட்டனர். இதே போன்று படைகள் தங்கிப்போரிட்ட இடங்கள் பாடிவீடு, படைவீடு, பாசறை என்று அழைக்கப்பட்டன. இப்பெயர்கள் யாவும் மக்கள் வாழ்ந்த நிலவியலையும், வரலாற்றையும் புரிந்துகொள்ள நமக்கு

உதவுகின்றன. அவ்வாறு படைவீடு என்றழைக்கப்பட்ட நிலப்பரப்பைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்து பின்னர் தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் தனிராஜ்ஜியங்களை அமைத்துக்கொண்டு வடதமிழ்நாட்டை ஆளத்தொடங்கிய அரசர்களில் குறிப்பிடத்தக்க ஆட்சி நடத்தியவர்கள் சம்புவராயர்கள் ஆவர். அவர்கள் பற்றிய கல்வெட்டுக்களில் காணப்பெறும் தகவல்களை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்

### முன்னுரை

மூன்றாம் இராசேந்திரன் ஆட்சிக்குப்பின், சோழப்பேரரசு வலிமைக் குன்றியது. அத்துடன் பிற மன்னர்களின் படையெடுப்பும் சோழ நாட்டில் நடைபெற்று வந்தது. இதன் காரணமாக 1279 - இல் சோழ அரசு வீழ்ச்சியைச் சந்தித்தது. இந்தச் சூழலில் சோழ அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்த பல குறுநில மன்னர்கள் தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் தனித்தனி ராஜ்ஜியங்களை அமைத்துக் கொண்டு வடதமிழ்நாட்டை ஆளத்தொடங்கினர். அவர்களில் மிக முக்கிய அரசர்களாக விளங்கியவர்கள் சம்புவராயர்கள். படைவீடு இவர்களின் நிரந்தரத் தலைநகரமாக விளங்கியது. 1257 - இல் ராஜகெம்பீர சம்புவராயர் இவ்வூரில் முதல் தனியரசை உருவாக்கினார். இவ்வரசு ராஜகெம்பீர ராஜ்ஜியம், படைவீட்டு ராஜ்ஜியம், ராஜகெம்பீர வளநாடு, ராஜகெம்பீரபுரம், மருதரைசர் படைவீடு போன்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்துக்கு அருகிலுள்ள கிடங்கில், முன்னூர் போன்ற பகுதிகளின் காவல் அதிகாரிகளாக சோழர்கால கல்வெட்டுகளில் இவர்கள் அறியப்படுகின்றனர். சிவனைக் குலமுதல்வனாகக் கொண்டு வழிபட்டதுடன் செங்கேணி, பள்ளி என்ற சொற்களை தங்களின் பெயருக்கு முன் கல்வெட்டுகளில் பொறித்துக்கொண்டனர்.

**ஓய்மானாட்டு முஞ்னூறான பண்டித சோழச்**
**சருப்பேதிமங்கலத்துக் குடிப்பள்ளி செங்கேணி**
**சாத்தன்[1]**
**முன்னூற்றூர் குடிப்பள்ளி செங்கேணி சம்புகராஜன்**
**நாலாயிரவன் அம்மையப்பனான ராஜேந்திர**
**சோழச் சம்புகராஜன்[2] (ப.9)**

காஞ்சிபுரம், விரிஞ்சிபுரம் போன்ற நகரங்கள் துணைத் தலைநகரங்களாக விளங்கின. பல்வேறு போர்களங்களில் வெற்றி பெற்ற சம்புவராய மன்னர்கள், சகலலோக சக்கரவர்த்தி, வென்று மண்கொண்டான், சென்றதிசை வென்றான், எதிரிலி, நித்ராவசன விஜயீ, சோணாடு கொண்டான், நாடாழ்வான், ஆளப்பிறந்தான், பாண்டிநாடு கொண்டான், பாலாற்றில் வென்றான், செய்யாற்றில் வென்றான் போன்ற பல்வேறு சிறப்பு பெயர்களில் அழைக்கப்பட்டனர்.

அரசக்கொடி, அரச முத்திரை, நாணயங்கள் (வீரசம்பன் குளிகை, நாராயணஅன் காசு) ஆகியவற்றில் காளைச் சின்னத்தை இவர்கள் பொறித்தனர். கல்பாக்கம் அருகில் உள்ள சத்ராஸ் (சதுரங்க ராஜநாராயணன் பட்டினம்) இவர்களின் கடற்துறைமுகமாகும். தெற்கில் காவிரி தொடங்கி, வடக்கில் திருப்பதி வரையிலும், மேற்கில் - கிழக்கு மலைத்தொடர்ச்சி முதல், கிழக்கில் - வங்கக் கடல் வரையிலும் இவர்களின் ஆட்சி விரிந்திருந்தன. இதுவரை சுமார் 200 — க்கும் மேற்பட்ட சம்புவராயர்களின் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கண்டறியப்பட்டு வருகின்றன. அக்கல்வெட்டுகளில் இடம்பெறும் நாடுகள், ஊர்கள், கோட்டங்கள், பற்றுகள் ஆகியவை குறித்து ஆவணப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. தமிழ்நாட்டின் வேலூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, விழுப்புரம், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சம்புவராயர்களின் கல்வெட்டுகல் உள்ளன என்றாலும் குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்ட கல்வெட்டுகள் மட்டும் இக்கட்டுரைக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**சம்புவராயர் கல்வெட்டுகளில் நாடும் ஊரும்**

நிலத்தையும், பொழுதையும் முதற்பொருளாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழர்கள், அந்நிலங்களின் நிலவியல் தன்மைக்கேற்ப வாழும் இடங்களுக்கு பெயரிட்டு அழைத்தனர். மலை சார்ந்த குறிஞ்சி நில ஊர்களுக்கு நாடு என்றும், காடு சார்ந்த முல்லை நில ஊர்களுக்கு •••••• என்றும், வயல்சார்ந்த மருதநில ஊர்களுக்கு புரம் என்றும், கடல் சார்ந்த நெய்தல் நில ஊர்களுக்கு பாக்கம் , பட்டினம் என்றும் பெயரிட்டனர். இதேபோன்று படைகள் தங்கிப் போரிட்ட இடங்கள் பாடிவீடு, படைவீடு, பாசறை என்று அழைக்கப்பட்டன. இப்பெயர்கள் யாவும் மக்கள் வாழ்ந்த நிலவியலையும், வரலாற்றையும் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் தொண்டை மண்டலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயரில் 24 கோட்டங்களாகவும், 179 நாடுகளாகவும், 1900 நத்தங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட 24 கோட்டங்களில் பல்குன்றக்கோட்டம், வெண்குன்றக்கோட்டம் ஆகிய கோட்ட அளவில் சம்புவராயர்களின் ஆட்சி விரிந்திருந்தது.[3] இக்கோட்டங்களில் அமைந்திருந்த நாடுகள்; ஊர்கள்; பற்றுகளின் பெயர்கள் யாவற்றையும் ஆராய்ந்து ஆவணப்படுத்துவதன் மூலம் தமிழகத்தின் இடைக்காலத்தில் சிறந்து விளங்கிய நாடுகள், ஊர்கள் குறித்தும், அவற்றின் சிறப்புகள் பற்றியும் அறிந்துகொள்ள முடியும். சம்புவராயர்கள் காலத்தில் சில ஊர்கள் அஞ்சினான் புகலிடங்களாக இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

| வ. எண் | மன்னன் பெயர் | கல்வெட்டு | ஆட்சி ஆண்டு | கோட்டம் | நாடு / பற்று | ஊர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ராஜகம்பீரச் சம்புவராயன் | திருமலை சமணர் கோயில் கல்வெட்டு (போளூர்) | 1236 | பல்குன்றக்கோட்டம் | 1.பங்கள நாடு (போளூர்)<br>2. தமனூர் நாடு | 1.வீரன்பாக்கம்<br>2.குன்றத்தூர் (இராஜகம்பீர நல்லூர்) |
| 2. | ராஜகம்பீரச் சம்புவராயன் | அம்மையப்ப ஈசுவரர் கோயில் (படைவீடு) | 1258 | பல்குன்றக்கோட்டம் | இராஜகம்பீர வளநாடு | 1. மருதரைசன் படைவீடு<br>2. உளகத்தூர் |
| 3. | வீரசம்பன் சம்புவராயன் | வேதபுரீசுவரர் கோயில் (செய்யார்) | 1315 | - | - | 1.திருவோத்தூர் (செய்யார்)<br>2 .செங்காடு<br>3. அனுக்காவூர்<br>4.தவசி பெரும்பாக்கம்<br>5. தொழுப்பேடு<br>6. பெரும்பாலை<br>7. குடநகர்<br>8. புதுப்பாக்கம்<br>9. காழுயூர்<br>10. ஆளப்பிறந்த விளாகம்<br>11. மட்டை<br>12. பாராசூர்<br>13. நங்கித்தச்சன் தாங்கல்<br>14. நல்லூர் சீராயம்பட்டு<br>15. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | குலசேகர சம்புவராயன் | வேதபுரீசுவரர் கோயில் (செய்யார்) | 1320 | - | - | 1.அகரம் செய்யாற்று வென்றான் ஸதுர் வேதிமங்கலம் |
| 5. | குலசேகர சம்புவராயன் | வைத்யநாத சுவாமி கோயில் (உக்கல்) | 1322 | - | - | 1. உக்கல் |
| 6. | குலசேகர சம்புவராயன் | நீலகண்டேசுவரர் கோயில் ( வெடால்) | 1330 | வெண்குன்றக் கோட்டம் | விக்கிரம பாண்டிய வளநாடு | 1.விடார் (வெடால்) |
| 7. | வென்று மண்கொண்ட சம்புவராயன் | அழகப் பெருமாள் கோயில் (பொன்னூர்) | 1336 | - | - | 1. பொன்னூர் |
| 8. | வென்று மண்கொண்ட சம்புவராயன் | சுந்தர வரதராஜப் பெருமாள் கோயில் | 1338 | - | - | 1. மண்டைக் குளத்தூர் |
| 9. | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | ஓசூர் பாறைக் கல்வெட்டு | 1340 | - | - | 1.ஓசூர் 2.காலிங்கராய நல்லூர் (காலிங்கராய சதுர்வேதிமங்கலம்) 3. சிறுகுளத்தூர் |
| 10 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | வேதபுரீசுவரர் கோயில் (செய்யார்) | 1341 | - | - | 1.நாவற்பாக்கம் 2.திருஞான சம்பந்த நல்லூர் |
| 11 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | அரங்கநாத சுவாமி கோயில் (திருமால்பாடி, வந்தவாசி) | 1341 | - | அண்ணமங்கலப்பற்று | 1.திருவாய்பாடி 2.தென்னாற்றூர் |
| 12 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | அகத்தீசுவரர் கோயில் (கீழ்க் கொடுங்காலூர், வந்தவாசி) | 1343 | வெண்குன்றக் கோட்டம் | மருதாடு நாடு | 1.கொடுங்காலூர் 2.மேலைக் கொடுங்காலூர் 3.மருதாடு - விக்கிரம சோழ நல்லூர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 3.காவிரிபாக்கம் |
| 13 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | திருகாமீசுவரர் கோயில் (காப்பளூர், போளூர்) | 1343 | - | பங்கள நாடு | 1.காமப்புல்லூர் |
| 14 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | வேதபுரீசுவரர் கோயில் (திருவோத்தூர், செய்யாறு) | 1343 | காலியூர்க் கோட்டம் | காழியூர் நாடு | 1.திருவோத்தூர்(செய்யாறு) |
| 15 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | வைத்தியநாத சாமி கோயில் (உக்கல்) | 1344 | - | அத்திப்பற்று | 1.பட பழம்பட்டு |
| 16 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | திருமணந்தீசர் கோயில் (மாமண்டூர், தூசி) | 1344 | - | - | மாவண்டூர் (மாமண்டூர்) |
| 17 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | வேதபுரீசுவரர் கோயில் (திருவோத்தூர்) | 1344 | ஜெயங்கொண்ட சோழ மண்டலம்/ பல்குன்றக்கோட்டம் | அத்திப்பற்று | 1.நாவற்பாக்கம் 2. திருஞானசம்பந்த நல்லூர் |
| 18 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | அரங்கனாத சுவாமி கோயில் (திருமால்பாடி) | 1353 | - | 1.பொன்னூற் பற்று 2.கலவைப் பற்று 3.முருகமங்கலப் பற்று 4.ஆந்திநாடு 5.ராஜகெம்பீரன் மலைக்கடந்த பற்று 6.செஞ்சிப் பற்று 7. பாக்கப் பற்று | 1.திருவாய்ப்பாடி 2.மண்டைக்குளத்தூர் 3.கந்தாடு 4. மரக்காணம் 5.திருவிடையாட்டம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8. அரசவல்லப் பற்று<br>9.தலைவாநல்லூற் பற்று<br>10. செங்காட்டு பற்று<br>11. அண்ணமங்கலப்பற்று<br>12. தென்னாற்றூர்ப் பற்று<br>13. சீயமங்கலப் பற்று<br>14. அச்சறுபாக்கப்பற்று<br>15. ஏழாயிரவேலி தென்பாதி<br>16. மதுராந்தகப் பற்று<br>17. உக்கல் பற்று<br>18. குவளைக் கோட்டுப் பற்று<br>19. திருக்கோவலூர்ப் பற்று<br>20.சிங்கமுலைப் பற்று<br>21. திருவண்ணாமலைப் பற்று | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 22. சிற்றிங்கமடப் பற்று<br>23.நென்மலிப்பற்று<br>24. பிரமதேசப் பற்று<br>25. மணவிற்கோட்டம்<br>26. சோளந்திரசிங்கபுரப் பற்று<br>27. ஐம்புநாடு | |
| 19 | முதலாம் ராசநாராயண சம்புவராயன் | வைத்தியநாதசுவாமி கோயில் (உக்கல்) | 1362 | - | பாகூர் நாடு | 1.உக்கல்<br>2.விக்ரமாபரண சதுர்வேதி மங்கலம் |
| 20 | இரண்டாம் ராசநாராயண சம்புவராயன் | ஒசூர் பாறைக் கல்வெட்டு | 1340 | எயிற்கோட்டம் | | 1.ஆற்பாக்கம்<br>2.காலிங்கராய நல்லூர்<br>3. சிறுகுளத்தூர் |
| 21 | இரண்டாம் ராசநாராயண சம்புவராயன் | சதுப்பேரி சிவன்கோயில் | 1342 | பல்குன்றக்கோட்டம் | 1.முருகமங்கலப் பற்று | 1.சதுப்பேரியான ஸ்ரீ மத் ராஜநாராயணச் சதுர்வேதிமங்கலம்<br>. |
| 22 | மூன்றாம் ராசநாராயண சம்புவராயன் | மகாதேவீசுவரர் கோயில் கல்வெட்டு | 1356-1379 | பல்குன்றக்கோட்டம் | 1.பங்களநாடு<br>2. முருகமங்கலப் பற்று | 1.இராசகெம்பூரன் மாதேவி மங்கலம்<br>2.தனி நின்று வென்றான் நல்லூர் |
| 23 | மூன்றாம் ராசநாராயண சம்புவராயன் | அகதீசுவரர் கோயில் கல்வெட்டு | 1379 | - | 1.சிங்கமலைப் பற்று<br>2.செங்குன்ற நாடு | 1.வாணகோப்பாடி<br>2.கூவாக்கோழி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 3.சோமநாதபுரச் சதுர்வேதிமங்கலம்<br>4.வைப்பூர் |

- மேற்கண்ட கல்வெட்டு தகவல்கள் யாவும் சம்புவராயர் வரலாறு என்ற நூலில் ப.326 — 548 வரையிலான பக்கங்களிலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும்.

சம்புவராயர்களின் ஆட்சியில் சோழர்களின் ஆட்சி காலத்தில் நிலவிய 'நாடு' எனப்படும் வருவாய்த்துறை அமைப்புமுறை நிலவில்லை. கல்வெட்டுகள் மண்டலம், கோட்டம், நாடு எனப்படும் பழைய அரசியல் நில இயல் பிரிவுகளைக் குறிப்பிட்டாலும் அவை வருவாய்த்துறையைக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இக்காலத்தில் பற்று என்னும் சொல் வருவாய்த்துறையின் பிரிவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.[4]

**முடிவுரை**

இவ்வாறு கோட்டம், நாடு, பற்று, ஊர்கள் சம்புவராயர்களின் ஆட்சிக்காலத்தில் சிறப்புடன் விளங்கியிருந்தது என்பதை அவர்களின் கல்வெட்டுகளின் வழியாக அறியமுடிகிறது. இவற்றிலிருந்து வரி வசூலிக்கப்பட்டு அவ்வருவாய் மூலம் அரச நிருவாகம் நடைபெற்றுள்ளது. பல்வேறு கல்வெட்டுகளில் திருவிழாக்கள் சிறப்புற நடைபெறவும் ஆணையிடப்பட்டுள்ளது. போரில் அரசன் பெற்ற வெற்றியின் நினைவாகவும் பல்வேறு புதிய ஊர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் உள்ள வடமாதிமங்கலம் (இராஜகம்பீரன் மாதேவி மங்கலம் ) என்ற ஊர் 'அஞ்சினான் புகலிடமாக' இருந்துள்ளது. அஞ்சினான்புகலிடம் என்பது பிறநாட்டின் நிலப்பகுதியிலிருந்து போர்க்காலங்களில் உயிருக்கு அஞ்சி அடைக்கலம் தேடி வரும் மக்களைப் பாதுகாப்பாக தங்கி வாழ வாழ்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஊராகும். கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் ஊர்களில் பல இன்றும் அதே பெயருடனும், சில ஊர்களின் பெயர்கள் திரிந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

**கட்டுரையாளர்**

**முனைவர் அ. அமுல்ராஜ்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
வள்ளல் பெ.தெ.லீ செங்கல்வராய நாயக்கர் கலை (ம) அறிவியல் கல்லூரி, சென்னை -112.

**அடிக்குறிப்புகள்**

1. சம்புவராயர் வரலாறு, ப.9
2. சம்புவராயர் வரலாறு, ப.9
3. வென்று மண்கொண்டான், ப. 30
4. சம்புவராயர் வரலாறு, ப.128

**பயன்படுத்திய நூல்கள்**

1. தங்கவேலு.கோ.டாக்டர், தியாகராசன்.இல, சம்புவராயர் வரலாறு, கோபால் நாராயணன் நினைவு கல்வி அறக்கட்டளை, கொரட்டூர், சென்னை — 80, முதற்பதிப்பு,1990.
2. அமுல்ராஜ்.அ முனைவர்., வென்று மண்கொண்டான், கல்விளக்கு பதிப்பகம், படைவீடு, திருவண்ணாமலை — 606 905, முதற்பதிப்பு, 2021.
3. திருவண்ணாமலை கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்லியல்துறை வெளியீடு.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com